[1987 ஏப்ரல் 7]

கிலே கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா அல்லது இதுபற்றி விவசாயிகளிடமிருந்து மனு ஏதேனும் வரப்பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியோடு செய்யப்பட்டிருக்கிற காவிரிப் பாசன மேம்பகுதி சீரமைக்கும் திட்டத்தில் இப்படிப்பட்ட செக்டாம்கள் போன்றவைகள் நிறைய சேர்த்துள்ளோம். ஆகவே, தகுந்த நேரத்தில், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

கும்பகோணம் தாலுகா ஏனநல்லூர் நாச்சியார்கோவில் கிராமத்தில் விவசாயத்திற்கு படுக்கை அணை கட்டுதல்.

334—(*வினா எண் 8293) திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தாலுகா ஏனநல்லூர் நாச்சியார்கோவில் கிராமத்தில் விவசாயத்திற்கான தண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய கூத்தனூர் அருகில் படுக்கை அணை (Bed Dam) கட்ட அரசு எடுத்த நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் வட்டம், கூத்தனூர் அருகில் படுக்கை அணை கட்டும் திட்டம் தற்போது இல்லை.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் வட்டம் கூத்தனூர் பகுதிக்கு சுமார் 1,000 ஏக்கர் பாசனத்திற்காக பெட் டாம் கட்டுவதாக காவிரி மாடர்னைசேஷன் டிவிஷனிலே ஒத்துக்கொண்டு, பிறகு காவிரி டிவிஷனல் இ.இ. அலுவலகத்திலே தேங்கி நிற்கிறது. இதற்காக விவசாயிகள் கடந்த ஆண்டு, கிட்டத்தட்ட 2,000 பேர் உண்ணாவிரதம் இருந்தார்கள். இதே கேள்வியை இரண்டு மாதங்களுக்கு முன்பு கேட்டபோது, அமைச்சர் அவர்கள், கவனிக்கப்படும் என்றார்கள். தற்போதாவது, கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா? கிட்டத்தட்ட 1,000 ஏக்கர் சுத்தமாக பாழாகி இருக்

கிறது. தண்ணீர் இன்றி அவதிப்படுகிறார்கள், கூத்தனூர் பகுதி மக்கள். எனவே, இனிமேலாவது அரசு கவனித்து, நடவடிக்கை எடுத்து, விவசாயிகளைக் காப்பாற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். அதற்கு ஏற்றாற்போல் அதிகாரிகளிடம் கலந்து பேசி, சாத்தியக்கூறு இருக்கும் என்று சொன்னால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, காவிரியில் தண்ணீர் வராத நிலையில், வருகிற தண்ணீரை முறையாகப் பயன்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் துடிதுடித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த முறை கூத்தனூர் படுக்கை அணை மாடாகுடி படுக்கை அணை தில்லையம்பர் படுக்கை அணை, சுந்தர பெருமாள் கோயில் படுக்கை அணை மற்றும் அண்ணல் அக்கிரஹாரம் படுக்கை அணை ஆகிய 5 கோரிக்கைகளை வைத்து உண்ணாவிரதம் இருந்தோம். சட்டமன்ற உறுப்பினர் தலைமையில் சுமார் 2,000 விவசாயிகள் உண்ணாவிரதம் இருந்தார்கள். ஆனால் பொதுப்பணித் துறையினர் இது குறித்து என்ன என்று கூட கவலைப்படாமல் இருக்கிறார்கள். விவசாயிகளின் தொல்லைகளைப் போக்க குறைந்தபட்சம் இந்தப் படுக்கை அணைகளை—இது ஒன்றும் தற்போது வைக்கப்படும் கோரிக்கை அல்ல—கடந்த 10 அல்லது 15 ஆண்டுகளாக வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கை—கட்டித்தர வேண்டும் என்று கேட்டு வருகிறோம். எனவே அரசு இதை உடனடியாகக் கவனித்து விவசாயிகளைக் காப்பாற்றுமா என்று அறிய விரும்புகிறேன். இந்த 5 படுக்கை அணைகளையும் வரும் நிதியாண்டிலாவது மேற்கொள்ளுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 7]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்கும்போது, பொதுப்பணித்துறையைச் சார்ந்த அதிகாரிகள் உண்ணாவிரதம் பற்றி ஏன் என்றுகூட கேட்கவில்லை என்று சொன்னார்கள். நான் அமைச்சர். அதை ஏன் என்று கேட்கிறேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம் நாகாவதி அணை.

335—(*வினா எண் 9032) திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் நாகாவதி அணையிலிருந்து வாய்க்கால் மூலம் பாசனம் பெற வாய்க்கால் கட்டுமானப் பணி முடிந்து விட்டதா?

(ஆ) ஆம் எனில், பாசன வசதி பெறும் கிராமங்கள் எவை எவை?

(இ) எத்தனை ஏக்கர் பாசன வசதி பெறும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நாகாவதி அணையிலிருந்து வாய்க்கால் மூலம் பாசனம் பெற வாய்க்கால் கட்டுமானப் பணி பெரும்பாலும் முடிந்துவிட்டது. இத்திட்ட வேலைகள் முழுவதையும் விரைவில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ) நாகாவதி திட்டத்தின்படி பாசன வசதி பெறும் கிராமங்களும், பயனடையும் பரப்பும் கீழ் வருமாறு:—

1. நாகாசன்அள்ளி	417.77 ஏக்கர்
2. சின்னம்பள்ளி	722.61 ஏக்கர்
3. பெரும்பாலை	852.62 ஏக்கர்.
மொத்தம்	1,993.00 ஏக்கர்